அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR **EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS**

17.02.2023

அனைவருக்கும் வணக்கம்,

**அனைத்துலகத் தாய்மொழி நாளினை முன்னிட்டு**

**அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால்**

**இணையவழியில் நடாத்தப்படும்**

# தாய்மொழிச் சிறப்பறிதல் போட்டி 2023

---

அனைத்துலகத் தாய்மொழி நாளினை முன்னிட்டு, அனைத்துலகத் தமிழர்கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் கடந்த ஆண்டினைப்போன்று இவ்வாண்டும் **'தாய்மொழிச் சிறப்பறிதல் போட்டி' இணையவழியில்** நடாத்தப்படவுள்ளது. இப்போட்டியில் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இப்போட்டியில் கீழ்வரும் விடயப்பரப்புகளில் வினாக்கள் இடம்பெறும்:

- தாய்மொழியின் சிறப்பு
- அனைத்துலகத் தாய்மொழி நாளின் வரலாறு
- தமிழ்மொழி
- தமிழ் மக்கள்
- தாய்மொழிக் கல்வியின் இன்றியமையாமை

இப்போட்டியின் விபரம் வருமாறு:

- இப்போட்டியில் மொத்தம் 20 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். இவ்வினாக்களுக்கு விடையளிப்பதற்கு 40 மணித்துளிகள் (நிமிடங்கள்) வழங்கப்படும்.
- ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள 4 விடைகளுள் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்தல் வேண்டும்.
- இப்போட்டியில் பங்குபற்றி 10 வினாக்களுக்கு மேல் சரியான விடையைத் தெரிவு செய்பவர்களுக்கு அதாவது 50 புள்ளிகளுக்கு மேல் பெறுபவர்களுக்கு வெற்றியீட்டியமைக்கான சிறப்புச் சான்றிதழ் அவர்களுடைய மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படும்.
- விடைகளைத் தெரிவுசெய்து சமர்ப்பித்த உடனேயே கணினியில் போட்டியாளர் பெற்ற புள்ளிகள் காண்பிக்கப்படும். 50 புள்ளிகளுக்கு மேல் பெறுபவர்களுக்கான சான்றிதழிலும் பெற்ற புள்ளிகள் குறிப்பிடப்பட்டு, சான்றிதழ்கள் உடனடியாக மின்னஞ்சலில் அனுப்பிவைக்கப்படும்.

- ஒவ்வொரு போட்டியாளரும் சான்றிதழினைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான புள்ளிகளைப் பெறுவதற்குப் பலமுறை முயற்சிக்கலாம்.
- 21.02.2023 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மத்திய ஐரோப்பிய நேரம் காலை 9:00 மணிமுதல் மறுநாள் (22.02.2023) காலை 9:00 மணிவரை 24 மணித்தியாலங்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.
- வயதுக்கட்டுப்பாடு இல்லை. விரும்பிய அனைவரும் பங்குபற்றலாம்.
- உலக நாடுகள் அனைத்திலுமிருந்து இப்போட்டியில் பங்குபற்றலாம்.
- இப்போட்டி நடைபெறும் நாளில் www.icedt.education எனும் அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் இணையத்தளத்தில் காணப்படும் '**தாய்மொழிச் சிறப்பறிதல் போட்டி**' எனும் இணைப்பை அழுத்துவதன் மூலம் போட்டியில் பங்குபற்றலாம். போட்டியில் பங்குபற்றும் போது உங்கள் மின்னஞ்சல் முகவரி, முழுப்பெயர் (தமிழிலும், ஆங்கிலத்திலும்), பிறந்தநாள், நாடு ஆகியவற்றைக் குறிப்பிட்டபின் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து சமர்ப்பித்தல் வேண்டும்.
- தாய்மொழியின் சிறப்பு, தாய்மொழிக் கல்வியின் இன்றியமையாமை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இப்போட்டியின் நோக்கமாகும்.

இப்போட்டியில் பங்குபற்றிக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுச் சிறப்பான சான்றிதழினையும் பெற்றுக்கொள்ள வாழ்த்தினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை**